1979 நவம்பர் 5]

இடமாதலால் விவசாயக் கல்லூரி அங்கே அமைப்பது முக்கியம் என்பதை அரசு உணர்ந்து இனிமேலாவது நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மூலக்கேள்வி கால்நடை மருத்துவக் கல்லூரியைப் பற்றியது மாண்புமிகு உறுப்பினர் கேட்பது விவசாயக் கல்லூரி பற்றியது. போதுமான அளவிற்கு விவசாயக் கல்லூரிகள் இருக்கின்றன. அதிலே தகுந்த மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பெருந்துறை காசநோய் மருத்துவமனை.

*வினா எண். 119 டாக்டர் ஏ. பொன்னுசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) பெரியார் மாவட்டம், பெருந்துறை காசநோய் மருத்துவமனை நிதி பற்றாக்குறையினால் சரிவர செயல்பட இயலாத நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) ஆம்.

(ஆ) இந்நிலையம் ஆண்டுதோறும் ரூ. 4 லட்சம் பற்றாக் குறையால் நடத்தப்படுவதால் அரசு இந்நிலையத்திற்கு அளிக்கும் மானியத்தொகையான ரூ. 2.00 இலட்சத்திலிருந்து ரூ. 4.00 இலட்சங்களாக உயர்த்துவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

டாக்டர் ஏ. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவு செய்யப்பட்டுப் படுக்கைகள் கொடுக்கமுடியாமல் நூற்றுக்கணக்கான நோயாளிகள் இங்கு இடம் கிடைக்குமா அல்லது அங்கு இடம் கிடைக்குமா என்று காத்துக்கொண்டிருப்பதைத் தவிர்க்கும் பொருட்டு, படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்த அரசு ஆலோசிக்குமா? உலகப் புகழ் பெற்ற அந்த மாபெரும் மருத்துவமனையை காச நோய் ஆராய்ச்சி நிலையமாக மாற்ற அரசு ஆலோசிக்குமா? நிதிநிலை இல்லாததால் பிணியாளர்கள், பணியாளர்கள் விகிதம் சரியில்லாததால் பிணியாளர்களுக்குச் சரியான பணி கிடைக்கவில்லை என்பதை அரசு அறியுமா? எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அறிவிக்க இயலுமா?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1965-ஆம் ஆண்டில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சம் பராமரிப்பு மானியமாக வழங்கப்பட்டு, 1971-72ஆம் ஆண்டிலே ரூபாய்

ஒன்றரை இலட்சமாகச் சில கட்டுப்பாடுகளுடன் அதிகப்படுத்தப் பட்டுள்ளது. அதற்குப்பிறகு ரூபாய் ஒன்றரை இலட்சத்திலிருந்து இரண்டு இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அரசால் ஆண்டு தோறும் வழங்கப்படும் இந்தப் பராமரிப்புத் தொகையால் ஈடுகட்ட முடியவில்லை என்று இந்நிறுவனத்தின் நிர்வாகிகள் முறையீடு செய்திருக்கிறார்கள். ஆண்டுதோறும் வழங்கப் படுகின்ற பராமரிப்புத் தொகையை இரண்டு இலட்சத்திலிருந்து நான்கு இலட்சமாக வழங்குமாறு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

D. Pharmacy Course

*Q.No. 120 : Thiru M. AMBIGAPATHY : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) whether seats in D. Pharmacy are reserved for the children of medical shop owners in the State who have an Association; and

(b) if so, the number of seats reserved in the State?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) ;

(அ) ஆம். மருந்தாக்கியல் பட்டயப் படிப்பில் 20 இடங்கள் மருந்து விற்பனையாளர்களின் பிள்ளைகளுக்காக ஒதுக்கப்படுகின்றன.

திரு. மு. அம்பிகாபதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒதுக்கப்படுகின்ற இடங்கள் அவர்களுடைய பிள்ளை களுக்கு முறையாகக் கிடைக்கிறதா? அப்படி கிடைக்கவில்லை யென்றால் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படிப்பட்டவர் களுக்குத்தான் கிடைக்கின்றது என்று இருந்து வருகிறது. அப்படிக் கிடைக்கவில்லை என்று குறிப்பாக மாண்புமிகு உறுப்பின ரவர்கள் தெரியப்படுத்தினால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

நாகை அரசினர் தலைமை மருத்துவமனைக்கு ஜெனரேட்டர்

*குறுகிய கால வினா எண். 3 திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகை பொது மருத்துவமனையில் வெள்ளம், புயல் காலங்களில் மின்சாரப் பாதிப்பை ஈடுசெய்ய ஜெனரேட்டர் பொருத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது பொருத்தப்படும்?